**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 249 / 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW : 1** |
| **Name** | **:** | **திருமதி. அம்சவள்ளி** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.01.2026**

எதிரி-2 ஆஜர். எதிரி 1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் மதுரை துவரிமானில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் வழக்கு சமயத்தில் இருந்து சுமார் 16 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனக்கு நந்தினி என்ற ஒரே மகள் இருந்தார். எனது மகளை 1வது எதிரி பாலமுருகன் என்பவருக்கு 24.08.2012ம்தேதி திருமணம் செய்து கொடுத்தேன். 1வது எதிரி இறந்துவிட்டார். அவர்களுக்கு விஷ்ணுபிரியன் என்ற ஒரே மகன் உள்ளார். அவருக்கு 17 வயது முடிந்து 5 மாதங்கள் ஆகிறது. அந்த பையனை பாலமுருகனின் அம்மா வளர்த்து வருகிறார். என் மகளுக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தி, சுமார் 2 1/2 வருடங்களுக்குள்ளேயே, 1வது எதிரி என் மகளை மிகவும் கொடுமைப்படுத்தினார். அவர்கள் சண்டை போட்டு அனுப்பி விட்டார்.

அதனால் நான் என் மகளை எங்கள் வீட்டிற்குக் கூட்டிவந்துவிட்டேன். என் மகள் என் வீட்டில் இருக்கும் போது, என் பேரனுக்கு சுமார் 3 வயது இருக்கும் போது, ஆஜர் 2வது எதிரி வந்து என் மகளைக் கூட்டிச் சென்றுவிட்டார். அப்போது நான் என் பேரனைத் தூக்கி கொண்டு, அழகர்கோவில் அருகே ஜாதகம் பார்க்கச் சென்றிருந்தேன். ஆஜர் 2வது எதிரிதான் என் மகளைக் கூட்டிச் சென்றது தெரியாமல், என் மருமகன் 1வது எதிரி மீது, நாகமலைபுதுக்கோட்டை காவல் நிலையத்திற்குச் சென்று, 5 பவுன் நகையும், 75,000/-த்தோடு என் மகளைக் கூட்டிச் சென்றுவிட்டதாக புகார் கொடுத்துவிட்டேன். போலிஸ்காரர்கள் என் மருமகன் 1வது எதிரியை சமயநல்லூரில் பிடித்து, உன் மாமியார் உன் மீது புகார் கொடுத்துள்ளார், என்னப்பா என்று கேட்டபோது, என் மருமகன் அவர்களிடம், சிவா என்பவர் தான் என் மனைவியைக் கூட்டிச் சென்றுவிட்டார். அவர் தான் என் மனைவியை ஒப்படைக்க வேண்டும் என்று 2வது எதிரி மீது புகார் கொடுத்தார். நானும் என் மகளை ஒப்படைக்க வேண்டும் என்று புகார் கொடுத்தேன். என்னை போலிசார் வரச் சொன்னார்கள் நான் போனேன். அப்போது பாலமுருகனும் அங்கு இருந்தார். பாலமுருகன், என் மகளைக் கூட்டிச்செல்லவில்லை என்று சொன்னார். அப்போது 2வது எதிரியின் அப்பா மட்டும் காவல் நிலையத்திற்கு வந்தார். 2வது எதிரியின் அப்பாவிடம், உங்கள் மகனை போலிசில் ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னார்கள். 3 நாட்கள் கழித்து, என் மகளும், ஆஜர் 2வது எதிரியும் போலிஸ் ஸ்டேசனுக்கு வந்துவிட்டார்கள். அங்கு போலிசார் என்னிடம், உங்க பொண்ணைக் கூட்டிச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். வேறு ஒருவருடன் சென்றுவிட்டு, 3 நாட்கள் கழித்து வந்ததால், நான் என் மகளைக் கூட்டிச் செல்ல மாட்டேன் என்று சொன்னேன். அப்போது 2வது எதிரி, நந்தினி இல்லாவிட்டால் நான்

செத்துவிடுவேன் என்றும் என் மகளும் 2வது எதிரியோடு தான் வாழ்வேன் என்றும், கட்டிக்கிட்டவன் தான் என்னோடு நன்றாக வாழவில்லை, அதனால் வாழ்ந்தால் 2வது எதிரியோடு தான் வாழ்வேன் என்று சொல்லிவிட்டாள். போலிசார் அவர்களிடம் நகைகளை எங்கே என்று கேட்டதற்கு, நகைகளை மெட்ராசில் ஒரு சேட்டு கடையில் ரூ.85,000/- க்கு அடகு வைத்து இருப்பதாகச் சொல்லி ஒரு ரசீதைக் காண்பித்தார், அந்த பணத்தைச் செலவு செய்துவிட்டதாகத் தெரிவித்தார். நான் வட்டிக்கு பணம் வாங்கிதான் அந்த 5 பவுன் நகை வாங்கினேன் என்று சொன்னபோது 2வது எதிரியின் அப்பா, அதற்கான பணத்தைக் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். ஸ்டேசனில் எனக்கு அந்த நகையையும் பணத்தையும் வாங்கிக் கொடுக்கவில்லை. அதன்பின், என் மகளும், 2வது எதிரியும் போய்விட்டார்கள். நான் என் பேரனைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டேன். சரியாக 12 நாட்கள் கழித்து, என் மகள் வஞ்சிப்பட்டியில் இறந்துவிட்டார். வஞ்சிப்பட்டியில் உள்ள என் பெரியம்மா வீரம்மாள் வீட்டிற்குப் பக்கத்தில் என் மகளை விட்டுவிட்டு, நீ உன் பெரியம்மா வீட்டிற்குப்போ, 3 நாட்கள் கழித்து உன் பெற்றோர்களை அழைத்து வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன் என்று சொல்லியுள்ளார். அதனால் என் மகள், என் பெரியம்மா வீட்டில் இருந்துள்ளார். புதன்கிழமை அன்று இரவு நான் என் பெரியம்மா வீட்டிற்குப் போய்விட்டேன். அங்கு என் மகளிடம் பேசாமல் தனியாக ஒரு ரூமில் போய் இருந்தேன். மறுநாள் காலையில் என் மகள், என் காலில் விழுந்து, நான் செய்தது தப்புமா என்று சொன்னார். நான் என் மகளிடம், இங்க எதுக்கும்மா இங்க வந்த என்று கேட்டதற்கு, சிவா என் மகளிடம், எங்க வீட்டில் பிரச்சனையா இருக்கு, நீ இங்க இரு, என் அம்மா, அப்பாவைக் கூட்டி வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றதாக என் மகள் என்னிடம் சொன்னார். என் வீடு

இடித்தது சம்பந்தமாக வியாழக்கிழமை என்னை நாகமலைபுதுக்கோட்டை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். அதனால் நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்திற்குப் போய்விட்டேன். இரவு 07.00 மணிக்கு என் பெரியம்மா வீட்டிற்குப் போனேன். வெள்ளிக்கிழமை காலையில் விடிந்துவிட்டது. நாங்கள் வஞ்சிப்பட்டியில் எங்கள் பெரியம்மா வீட்டில் இருந்தோம். அப்போது என் மகள், 2வது எதிரிக்கு போன் மேல போன் போட்டுக் கொண்டே இருந்தார். 2வது எதிரி போனை எடுத்தாரா என்று தெரியவில்லை. வெள்ளிக்கிழமை மதியம் சுமார் 12.00 மணி இருக்கும். என் மகள் என்னிடம், அன்று காலை 10.00 மணியிலிருந்து, வாரேன் என்று சொல்லிவிட்டு, வராமல் என்னை ஏமாற்றிவிட்டாங்க என்று சொல்லி அழுதாள். நான் எதுவும் பேசாமல் இருந்தேன். நான் என் பெரியம்மா வீட்டில் மலையில் இருந்து இறங்கி கீழே வந்து எனது போனுக்கு சார்ஜ் ஏற்ற வந்தேன். நான் வந்த சுமார் 1 மணி நேரத்தில், என் மகள் தீ மளமளவென எரிய, மலை அடிவாரத்திற்கு என் மகள் ஓடிவந்தாள். நான் எதிரில் சென்று காப்பாற்றப் போனேன். ஆனால் என் மகள் பறந்து ரோட்டிற்கு வந்துவிட்டாள். என் மகள் எரிந்து ரோட்டின் மேல் கிடந்தாள். என் மகளிடம் என்னம்மா இப்படி பண்ணிட்ட என்று கேட்டேன். அதற்கு என் மகள் என்னிடம், சிவா, பாலமுருகன், சிவாவின் அண்ணன் ஹரி, அப்பா முருகன், சித்தப்பா செந்தில் ஆகியோர் என்னைப் பிடித்துக் கொண்டு, என் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துவிட்டதாகவும், நான் ஓடி வந்துவிட்டேன் என்று என் மகள் சொன்னது. அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அப்போது அங்கு கொட்டாம்பட்டியில் இருந்து அங்கு வேறு விசாரணைக்கு போலிசார் வந்திருந்தார்.என் மகள் காப்பாற்றுங்கள் என்று கத்தினாள். டாக்டர்கள்

ஓடிவந்தார்கள். கொட்டாம்பட்டி போலிஸ் வந்து என் மகளிடம் என்ன நடந்தது என்று கேட்டார். அவரிடம் என் மகள், சிவா, பாலமுருகன், சிவாவின் அண்ணன் ஹரி, அப்பா முருகன், சித்தப்பா செந்தில் ஆகியோர் என் மகளைப் பிடித்துக் கொண்டு, மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துவிட்டதாகச் சொன்னாள். என் மகள் சொன்னதை அந்த போலிசார் பேப்பரில் எழுதிக் கொண்டார். மேலூரில் இருந்து என் மகளை மதுரை பெரியாஸ் பத்திரிக்குக் கொண்டு போகச் சொன்னதால் அங்கு கொண்டு போனோம். அப்போது என் மகளை கீழே இறக்கும் போது, நர்ஸ் வந்து பார்த்துவிட்டு என் மகள் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். நான் மருத்துவமனையில் இருந்த போது RDO எங்களை விசாரித்தார்கள். நான் போலிஸ் ஸ்டேசனுக்குப் போகவில்லை. பெட்ரோல் மண்ணெண்ணெய் கலந்து ஊற்றி தான் எரித்துள்ளார்கள் என்று RDO சொல்லிவிட்டார். அந்த 5 பேரையும் அரஸ்ட் செய்யச் சொல்லி RDO சொல்லிவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்தை மேலூர் ஆஸ்பத்திரியில் இருக்கும் போது, அரிச்சந்திரன் என்ற கொட்டாம்பட்டி போலிசார் வாங்கினார். என் மகள் சொன்ன வாக்குமூலத்தை, அவர் வெள்ளைப் பேப்பரில் பேனாவில் எழுதினார். நான் கையொப்பம் போட மாட்டேன் என்று சொன்னதற்கு, வேற ஒன்னும் இல்லப்பா நீ கையொப்பம் போடனும் என்று சொன்னதால் அந்த கையொப்பம் செய்தேன். புகாரில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும், என் மகள் கொட்டாம்பட்டி போலிஸ் அரிசந்திரனிடம் சொன்னது. புகார் மனுவில் உள்ள சங்கதிகள் நான் சொல்லவில்லை, என் மகள் நந்தினி தான் சொன்னாள். **புகார் மனுவில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆகும்.** கொட்டாம்பட்டி போலிஸ் ஸ்டேசனில் வைத்து என்னை விசாரித்தார்கள். என் மகளை அடக்கம் செய்த பிறகு, சுமார் 15 நாட்களுக்குள்

கொட்டம்பட்டி போலிசார் வரச் சொன்னார்கள். நான் அங்கு சென்றேன். சாட்சி மீண்டும், என் மகள் மதுரை பெரியாஸ்பத்திரியில் இறந்து அங்கு வைத்திருந்த போதே, இரவோடு இரவாக போலிசார் என்னை கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு கூட்டிச் சென்று இரவு 02.00 மணி வரை அங்கு வைத்து விசாரித்தார்கள். எனக்கு என் பெயரைத் தவிர வேறு எதுவும் எழுதப் படிக்கத் தெரியாது. நான் சொன்னதை அவர்கள் எழுதிக் கொண்டார்கள். நான் கையெழுத்திட்ட காகித்ததில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் சொன்னது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN

Digitally signed by NAGARAJAN
Date: 2026.01.27 16:01:58 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை